DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC 121/2012 |
| Deposition of Witness for | Prosecution PW 1 |
| Name | சகாயமேரி |
| Father / Husband Name | ஆராக்கியசாமி |
| Village | |
| Taluk | தளிர்தலை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 02nd March 2024.

---

**(1 முதல் 9 எதிரிகள் ஆஜர்).**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) பிராமண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் சொன்னது என்றால் நான் சொல்லித்தான் வழக்கறிஞர் தயார் செய்தார். எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தார்கள். எங்கள் சங்கத்தில் மொத்தம் எத்தனை உறுப்பினர் என்றால் 12. 1 வது மனோகரன் எனது கணவரின் சகோதரர் என்றால் சரிதான். அவர் மூத்த தாரத்தின் மகன் ஆவார். 2 வது எதிரி செல்வி எனக்கு என்ன உறவு என்றால் எனது மச்சானின் மனைவி.

2) எனது சங்கத்தில் கோமதி என்ற நபர் இருந்தாரா என்றால் இருந்தார். அவரது வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் அடுத்த தெருவில் அவர் வீடு உள்ளது. எங்கள் சங்கத்தில் 1, 2 எதிரிகள் உறுப்பினர் கிடையாது என்றால் சரிதான். அந்த சங்கத்தில் நான் என்ன பொறுப்பில் இருந்தேன் என்றால் தலைவியாக இருந்தேன். வரவு செலவு புத்தகம் என்னிடம் இருந்ததா என்றால் என்னிடம் இருந்தது அதை கோமதி மூலமாக எதிரிகள் எடுத்துக் கொண்டார்கள். வங்கி கணக்கு புத்தகம் மற்றும் வரவு செலவு நோட்டு குழு ஆரம்பித்து எவ்வளவு நாட்கள் என்னிடம் இருந்தது என்றால் முதல் கடன்

தொகை பெற்றபோதும் சுமார் 1ஆண்டுகள் என்னிடம் இருந்தது.

3) மாதம் மாதம் எவ்வளவு சந்தா அந்தக் குழுவிற்கு செலுத்த வேண்டும் என்றால் 105 ரூபாய். அதை வரவு செலவு நோட்டில் எழுதுவது வழக்கமா என்றால் ஆமாம். அந்த சந்தா பணம் 105 ரூபாயை எந்த தேதியில் வங்கியில் செலுத்துவோம் என்றால் ஞாபகமில்லை. பணம் வசூல் செய்த மறுநாளே வங்கியில் செலுத்தி விடுவோம். எந்த தேதியில் எந்த மாதத்தில் கடன் பெறப்பட்டது என்றால் தேதி, மாதம் ஞாபகமில்லை. ரூபாய் 12 ஆயிரம் வாங்கினோம் ஒரு ஆளுக்கு 1000 ரூபாய் எடுத்துக் கொண்டு அதற்கான தொகையையும் கட்டினோம்.

4) இரண்டாவது முறையாக 45 ஆயிரம் ரூபாய் கடனாகப் பெற்று அதை குழுவில் உள்ள ஒவ்வொருவரும் தலா 3 ஆயிரம் ரூபாய் என பிரித்துக் கொண்டோம். அதற்கான தவணைத் தொகையை நான் தான் அனைவரிடமும் பெற்று வங்கியில் செலுத்துவேனா என்றால் ஆமாம். அதில் மூன்று நபர்கள் பணம் செலுத்தவில்லை. எத்தனை மாதம் பணம் கட்டினார்கள் என்றால் 7 மாதம் கட்டினார்கள் அதன்பிறகு கட்டவில்லை. நான் வரவு செலவு செய்து வந்த விவரம் என் கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும் வரவு செலவு கணக்கை அவர்தான் எழுதுவார். அவர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் கொத்தனார் வேலை செய்து வருகிறார்.

5) குழுவில் கடன் தொகை செலுத்தவது தொடர்பாக வங்கியிலிருந்து எனக்கு அறிவிப்பு எதுவும் வந்ததா என்றால் இல்லை. மேற்படி நபர்கள் பணம் செலுத்தவில்லை என்ற விவரத்தை எழுதிக் கொடுத்துவிட்டு வந்தேன். எதிரிகள் என் மீது மேற்படி லோன் பணத்தை நான் மோசடி செய்து விட்டதாக சொல்லி காளையார் கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் ஆமாம். கோமதி என்பவர் அவர் கொடுத்த பணத்தை நான் வங்கியில் செலுத்தவில்லை என்று என்னிடம் கேட்டபோது நானும் எனது கணவரும் கோமதியை அடித்தது தொடர்பாக காளையார் கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

6) மேற்சொன்ன புகார் கோமதி என்பவரால் கொடுக்கப்பட்டது என்றாலும் அந்த புகாரை போலீசார் விசாரணையில் 1 வது எதிரி மனோகரன் நடந்த உண்மைகளை சொன்னதற்காக வழக்கு பதிவு செய்ய வேண்டாம் என்பதற்காக கவுன்சிலர் ராமநாதன், பஞ்சாயத்து தலைவர் மூர்த்தி ஆகியோர்களை அழைத்து பஞ்சாயத்து பேசி வழக்கு பதிவு செய்யவிடாமல் செய்தேன் என்றால் சரியல்ல. கோமதி எனக்கு எதிராக கொடுத்த வழக்கில் மனோகரனும் அவரது மனைவி செல்வியும் சாட்சி சொன்னதால் அவர்களுக்கு எதிராக நான் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) எனது கணவரை எதிரிகள் கடத்தி சென்று விட்டதாக காவல் துறை

கண்காணிப்பாளருக்கு நான் புகார் கொடுத்து அந்தப் புகாரின் பேரில் விசாரணை செய்யப்பட்டு நான் பொய் புகார் கொடுக்கப்பட்டதாக வழக்கு முடிக்கப்பட்டதா என்றால் நான் அவ்வாறான புகாரை கொடுக்கவில்லை. எனது வீட்டைச் சுற்றி எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 3 வீடுகள் உள்ளது. சாட்சி காளிமுத்தன் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் சூச்சனாங்குடி. பக்கத்து வீட்டில் வசிப்பவர்களின் பெயர்கள் என்றால் கிளாரா அம்மா வீடு, சந்தன வாத்தியார்வீடு மற்றும் தனசாமி வீடு.

8) அந்த ஊரில் சின்னச் சண்டை என்றாலும் ஊரில் உள்ள எல்லாரும் கூடிவிடுவார்கள் என்றால் சரிதான். வேடிக்கைதான் பார்ப்பார்கள் எதுவும் கேட்கமாட்டார்கள். குங்குமம் மகளிர் குழு வைத்து நடத்தியற்கு உண்டான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 05.06.2008 ம் தேதி எனது கணவர் வெளியூர் சென்றுவிட்டரா என்றால் ஆமாம். திருடப்பட்டதாக சொல்லப்படும் ஆட்டின் வகைகள் மற்றும் என்ன நிறம் அதன் வயது, கலர் மற்றும் மதிப்பீடு குறித்து புகாரிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். ஆடு என்று தான் குறிப்பிட்டுள்ளேன்.

9) நான் சொல்வது போல் வழக்கு சம்பவமும் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் வங்கியில் பெறப்பட்ட கடனை குழு உறுப்பினர்கள் என்னிடம் செலுத்தியும் நான் அதை வங்கியில் செலுத்தாமல் மோசடி செய்தேன் என்றாலும் அதை மறைத்து இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் வங்கியில் பணம் செலுத்தியிருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்தது பொய் புகார் என்பதால் தான் அதை காவல் துறையினர் வழக்கை முடித்துவிட்டனர் என்றால் சரியல்ல. நான் செய்த மோசடியை மறைப்பதற்காக தனிநபர் வழக்கு தாக்கல் செய்து எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) மோசஸ் மகன் பாண்டி, அடைக்களம், ஜெயராஜ் ஆகியோர் எங்களது குழுவில் உறுப்பினர்கள் கிடையாது என்றால் சரிதான். ஆனால் அவர்கள் எனது ஆட்டை திருடிச் சென்றுள்ளார்கள். எனது வீடு ஓட்டு வீடு என்றால் சரிதான். எனது வீடு எவ்வளவு நீள அகலத்தில் உள்ளது என்றால் 17x22. வங்கியில் நானும் கடன் வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். எனது பெயரில் வங்கியில் இருந்த கடன் கணக்கை முடித்துவிட்டேனா என்றால் ஆமாம். என்னுடன் கடன் வாங்கிய நபர்கள் என்னிடம் பணம் செலுத்தியதையும் வங்கியில் செலுத்தி அவர்களது கணக்கையும் முடித்துவிட்டேன்.

11) பணம் செலுத்தியதற்கு உண்டான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் அந்த ரசீதைத்தான் எதிரிகள் எடுத்துச் சென்றுவிட்டார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் 05.06.2008 ம் தேதிக்கு முன்பே கடன்

தொகையை செலுத்திவிட்டேனா என்றால் ஆமாம். நான் பணத்தை மோசடி செய்துவிட்டதாக சூசைமேரி என்பவர் 16.06.2008 ம் தேதி காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து அதில் நான் விசாரணைக்காக ஆஜர் ஆனேனா என்றால் இல்லை அது பற்றித் தெரியாது.

12) 17.11.2014 ல் குழந்தைதெரஸ், சவரியம்மாள், சூசைமேரி, செல்வி ஆகியோர்கள் என் மீது காவல் துறை கண்காணிப்பாளர் சிவகங்கை அவர்களிடம் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. அதில் நான் ஆஜர் ஆனேனா என்றால் இல்லை. நான் கடைசியா பணம் செலுத்தியது எந்த தேதியில் யாரை கூட அழைத்துச் சென்றேன் என்றால் ஞாபகமில்லை. வங்கியில் விசாரித்தால் நான் எந்த தேதியில் பணம் கட்டினேன் என்றால் தெரியும். நான் சொல்வது போல் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எந்த வழக்கு சொத்து என்னிடம் இருந்து திருடப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளிடமிருந்து வசூல் செய்த பணத்தை வங்கிக்கு செலுத்தாமல் மோசடி செய்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி இந்த பொய் புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 02.03.2024**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**